1980 பிப்ரவரி 7]

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): 500 வழக்கறிஞர்கள் நாமக்கல்லில் இருக்கிறார்கள் என்றால் அது நம்பக்கூடிய விஷயமல்ல. மேலும் சென்ற ஆண்டுதான் இந்த நீதிமன்றம் அங்கே ஆரம்பிக்கப்பட்டது. தற்போது பல்வேறு மாவட்டங்களில் உள்ள பெரிய நீதி மன்றங்களுக்குக் கட்டடம் கட்டுவதற்கு நிதி வசதி இல்லை. ஆகவே இப்போது கட்டடம் கட்டுகிற உத்தேசமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கங்கைகொண்ட சோழபுரத்தில் கலைக்கூடம் அமைத்தல்.

*வினா எண். 92—திரு. வே. கருணாமூர்த்தி: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

வரலாற்று சிறப்புமிக்க கங்கைகொண்ட சோழபுரம் பகுதியில் பல கிராமங்களில் உள்ள சிற்பங்களை சேகரித்து கங்கைகொண்ட சோழபுரத்தில் ஒரு கலைக்கூடம் (MUSEUM) அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கங்கைகொண்ட சோழபுரம் பகுதியில் செங்கமேடு என்ற இடத்தில், வரலாற்று சிறப்பும், கலைச் செறிவும் கொண்ட கலிங்கத்து சிற்பங்கள், வைரவர், வைரவி சிலைகளை தொல்பொருள் துறை எடுத்து தனியாக ஒரு கட்டிடம் எழுப்பி அதன் உள்ளே வைத்துப் பாதுகாத்து வருகிறது. அதைத் தொடர்ந்து பிற இடங்களில் உள்ள சிலைகளையும் சேமித்து பாதுகாக்கும் பணியை இவ்வாண்டு மேற்கொள்ளும். அதற்காகத் தனியாக அங்கு ஒரு கலைக்கூடம் அமைக்கப்படுமா என்பது அங்கே கிடைக்கப் பெறக் கூடிய சிற்பங்களின் எண்ணிக்கை அவைகளின் தொன்மை, வரலாற்றுச் சிறப்பு, கலைச் செறிவு போன்றவைகளைப் பொருத்து அமையும்.

நுண்படச் சுருள்களுக்கான காப்பகம்

*வினா எண். 93—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) 1978-79 ஆண்டு ஆவணக்காப்பக நுண்படச்சுருள் அறை நிறுவ, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதா ?

(ஆ) காப்பகத்தில் புராதன பத்திரங்களைப் பாதுகாக்க நுட்ப பொறியாளர்களின் அபிப்பிராயம் கோரப்பட்டதா ?

(இ) ஆம் என்றால், அபிப்பிராயங்களைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

ஈரோடு, கரூர் பேருந்து நிலையங்களிலுள்ள கழிப்பிடங்கள்.

*வினா எண். 94—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஈரோடு, கரூர் ஆகிய இரு நகர் மன்ற பேருந்து நிலையங்களில் பொதுக்கழிப்பிடம் பயன்படுத்தும் பயணிகளிடம் கட்டணம் வசூலிப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அத்தகு நிலையங்களில் பொதுக் கழிப்பிடம் கட்டித்தரும் திட்டம் அரசிடம் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) ஈரோடு நகராட்சியில் பிரதான பேருந்து நிலையத்தில் 6 இருக்கைகள் கொண்ட கழிப்பிடங்கள் கட்டப் பட்டு வருகின்றன.

திரு. யா. சை. மு. யூசுப் : நான் மூலக்கேள்வியில் குறிப்பிட்டிருப்பது, இரண்டு நகரமன்ற பேருந்து நிலையங்களில் உள்ள பொதுக்கழிப்பிடங்கள் பற்றியது. தமிழ்நாட்டிலுள்ள பெருவாரியான நகரமன்றங்கள் பராமரிப்பிலுள்ள பொதுக் கழிப்பிடங்கள், குறிப்பாக பேருந்து நிலையங்களில் உள்ள கழிப்பிடங்கள் லாபம் சம்பாதிக்கவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் ஏலம்விட்டு, ஏலம் எடுத்தவர்கள் பராமரிப்பில் விடப்படுகின்றன, அப்படி அவர்கள் பராமரிப்பில் விடும்போது, அவர்கள் பணத்தை மட்டும் வசூலிக்கிற அடிப்படையில் பணம் வசூலிக்கக்கூடிய அளவிற்கு பொதுக்கழிப்பிடங்களை சுத்தப் படுத்துவது கிடையாது. ஆகவே அதைப் பயன்படுத்துகிற பயணிகள் பொதுக்கழிப்பிடங்களை மோசமான நிலையில் பயன்படுத்துவதன் காரணமாக பல்வேறு தொத்துநோய்களுக்கு ஆட்படுகிறார்கள் என்பதை அரசு உணர்ந்து அதைத் தடுக்க